முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.11.2025) தலைமைச் செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர் சார்பில் 10 கோடியே 79 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை திறந்து வைத்து, 38 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள சமூகநீதி கல்லூரி மாணவர் மற்றும் மாணவிகளுக்கான விடுதிக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார். உடன் அமைச்சர்கள் சா.மு.நாசர், சிவ.வீ. மெய்யநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், அரசு உயர் அதிகாரிகள் எ. சரவணவேல்ராஜ், வ.கலை யரசி, முனைவர் சீ.சுரேஷ்குமார், மு. ஆசியா மரியம், வக்பு வாரிய தலைமை செயல் அலுவலர் அப்தாப் ரசூல், ஆகியோர் கலந்து கொண்டனர்.

தீராக்காதல் திருக்குறள் திட்டத்தின் கீழ்

“வள்ளுவம் வாழ்க்கையானால்...” நாட்டிய நாடக நிகழ்ச்சி!

அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் தொடங்கி வைத்தார்!

சென்னை, நவ.28-

தமிழ் வளர்ச்சித் துறை நிதி நல்கையுடன் தீராக் காதல் திருக்குறள் என்ற திட்டத்தைத் தமிழ்நாடு அரசின் கீழ் தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் கீழ் இயங்கி வரும் தமிழ் இணையக் கல்விக்கழகம் செயல்படுத்தி வருகிறது.

இதில் முதற்கட்டமாக, திருக்குறளின் சிறப்பை இளைய தலைமுறையினரிடம் கொண்டு செல்லும் விதமாக பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்குக் குறளோவியப் போட்டி நடத்தப்பட்டது.

இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுத்தொகையும் சான்றிதழ்களும் முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன. அவற்றுள் சிறந்த ஓவியங்கள் நாட்காட்டியாகத் தொகுக்கப்பட்டுப் பொது மக்கள் அனைவரும் பயன் பெறும் வகையில் தமிழ் மின் நூலகத்தில் (www.tamildigiltallibrary.in) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இவ்வோவியங்கள் சென்னை, மதுரை ஆகிய நகரங்களில் பொதுமக்கள் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டன. அதனைத் தொடர்ந்து, ‘குறள் இனிது’ என்ற நாட்டிய நாடகம் சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடத்தப்பட்டது.

இதன் அடுத்தகட்டமாக, திருக்குறளின் பொருண்மைகளை எடுத்துரைக்கும் விதமாக நாட்டிய நாடக நிகழ்ச்சிகளை கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஆகிய நகரங்களில் நடத்தத் திட்டமிடப்பட்டு, 13.10.2025 அன்று கோயம்புத்தூர் குமரகுரு கல்வி நிறுவனத்தில் திருக்குறள் நாட்டிய நாடக நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இதன் தொடர் நிகழ்வாக மதுரை, பாத்திமா கல்லூரியில் நேற்று (27.11.2025) கலைச்சுடர்மணி திருமதி சஸ்மிதா அரோராவின், சங்கரம் நடனக் குழுவினரினைக் கொண்டு “வள்ளுவம் வாழ்க்கையானால்...” என்ற திருக்குறள் நாட்டிய நாடக நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில், மனித வாழ்வுக்குத் தேவையான இன்றியமையாக் கருத்துக்களைத் தன்னகத்தே கொண்ட திருக்குறளின் அறக்கருத்துகளையும் பண்பாட்டு விழுமியங்களையும் நாட்டிய நாடகம் மூலம் விளக்கினர்.

இந்நிகழ்ச்சியினை தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் தொடங்கி வைத்துத் தலைமையுரையாற்றினார்.

இந்நிகழ்வில் மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திட்ட இயக்குநர் திருமிகு. வானதி, பாத்திமா கல்லூரியின் செயலாளர் முனைவர் சகோதரி இக்னேசியஸ் மேரி. முதல்வர் முனைவர் பாத்திமா மேரி, தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் இயக்குநர் (பொ.) ரெ.கோமகன், துணை இயக்குநர் திருமதி அ. அருண்மொழி மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்நாட்டிய நாடக நிகழ்ச்சியினை 1000க்கும் மேற்பட்ட பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்கள் கண்டுகளித்தனர்.

வேளச்சேரி மேற்கு பகுதி 177வது வார்டில் உள்ள தண்டீஸ்வரர் கோவிலில் ரூபாய் 93 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள அன்னதான கூடத்தை கழக மாநில தேர்தல் பணிக்குழு செயலாளரும், வார்டு மாமன்ற உறுப்பினருமான வேளச்சேரி பெ.மணிமாறன் தலைமையில், இந்து சமயஅறநிலைத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு திறந்துவைத்து, ஐந்து மாற்றுத்தினறாளி ஜோடிகளுக்கு திருமணத்தை நடத்திவைத்து சீர்வரிசைகளை வழங்கினார். இந்நிகழ்வில் பகுதி கழக நிர்வாகிகள், வட்டகழக நிர்வாகிகள் கழக தோழர்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்
(கலைப் பண்பாட்டு இயக்ககம்)
முத்தமிழ்ப் பேரவை
இணைந்து வழங்கும்
நாட்டிய விழா

நாள்: 28.11.2025 வெள்ளிக்கிழமை நேரம்: மாலை 05.30 மணி
இடம்: திருவாவடுதுறை டி.என்.ராஜரத்தினம் அரங்கம், ராஜா அண்ணாமலைபுரம், சென்னை-28

வரவேற்புரை : திருமதி விஜயா தாயன்பன் அவர்கள், உறுப்பினர் - செயலாளர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்
தலைமையுரை : திரு. வாகை சந்திரசேகர் அவர்கள், தலைவர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் / தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம்
முன்னிலையுரை : திரு. ஜெ.ராமானுஜம் அவர்கள், தலைவர், முத்தமிழ்ப்பேரவை
விழாப் பேருரை : மாண்புமிகு பால்வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. மனோ தங்கராஜ் அவர்கள்
வாழ்த்துரை : திரு. மயிலை த.வேலு அவர்கள், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர், பரதநாட்டிய கலைஞர் "கலைமாமணி" முனைவர் லட்சுமி இராமசுவாமி அவர்கள்

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக புதிய நாட்டிய நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்ய நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் கலைமாமணி முத்தரசிரவி அவர்களின் கலைக்கோயில் நாட்டியப் பள்ளி வழங்கும் “பெண் வழி மெய்ப்பாடு” நாட்டிய நாடகம் நடைபெறும்.

அனைவரும் வருக! அனுமதி இலவசம்!!

அழைக்கும்...
எம்.ஆர்.எம்.பாலசுப்பிரமணியன்
மாவட்ட அவைத்தலைவர்,
மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.11.2025) தலைமைச் செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையில் பணிபுரிந்து பணியின் போது இயற்கை எய்திய பணியாளர்களின் 50 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் விடுதி சமையலர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன் அமைச்சர்கள் சா.மு.நாசர், சிவ.வீ.மெய்யநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் மற்றும் உயர் அதிகாரிகள் உள்ளனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்:

சென்னை கிழக்கு மாவட்டத்தில் மாணவ-மாணவிகளுக்கு - திருநங்கைகளுக்கு உதவித்தொகை!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில்! மேயர் பிரியா ஏற்பாட்டில் பத்மஸ்ரீ கமலஹாசன் வழங்கினார்!

சென்னை, நவ.28-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, நேற்று (27.11.2025) சென்னை, பாரிமுனை, ராஜா அண்ணாமலை மன்றத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் மேயர் திருமதி. ஆர்.பிரியா ராஜன் ஏற்பாட்டில் மக்கள் நீதி மய்யத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பத்மஸ்ரீ கமல்ஹாசன் அவர்கள் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி ஊக்கத்தொகை மற்றும் உபகரணங்கள், கர்ப்பிணி பெண்களுக்கு பேறுகால உதவிகள் மற்றும் திருநங்கைகளுக்கு உதவித்தொகை வழங்கி சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் 50 மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சார்ந்த 500 மகளிர்களுக்கு சுயல்நிதி மற்றும் புத்தாடைகள், 200 கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு கல்வி ஊக்கத்தொகை மற்றும் உபகரணங்கள், 100 திருநங்கைகளுக்கு புத்தாடை மற்றும் நிதியுதவியும், 110 கர்ப்பிணி பெண்களுக்கு பேறுகால உதவித்தொகை, புத்தாடை மற்றும்பிறக்கும்குழந்தைகளுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் 50 கல்லூரி மாணவ மாணவியர்கள் நவீன கல்வியை பயில்வதற்காக மடிக்கணினி மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மதுரை உலக தமிழ் சங்கத்தின் துணைத் தலைவர் முனைவர் பர்வீன் சுல்தானா, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.தாயகம் கவி, வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் வானவில் விஜய், துணை அமைப்பாளர் ஜெகதீஷ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ். ரவிசந்திரன், கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, மாநில பகுதி செயலாளர்கள் எஸ். முரளி, ராஜசேகர், வட்ட செயலாளர் சதீஷ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இளைஞர் எழுச்சி நாளை முன்னிட்டு ஆலந்தூர் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதி செயலாளரும், மண்டல குழுத் தலைவருமான என்.சந்திரன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான தா.மோ. அன்பரசன், கழக கொள்கை பரப்புச் செயலாளரும், தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவருமான திண்டுக்கல் ஐ.லியோனி ஆகியோர் உரையாற்றினார்கள். உடன் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., மீ.அ.வைதியலிங்கம், ப.குணாளன், டி.பாபு, ஏ.வந்தே மாதரம், ஜி.கே.விவேகானந்தன், ஆர்.டி.பூபாலன், கே.எத்திராஜ், சு.சதீஷ், கோல்டு டி.பிரகாஷ், பி.சாய் ஜெய்காந்த், ஆர்.ஆர்.ஜெயராம் மார்த்தாண்டன், கே.ஆர்.ஆனந்தன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர். இறுதியில் 167வது வட்டச் செயலாளர் ஜெ.நடராஜன் நன்றி கூறினார்.

தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை
மற்றும்
கவின்கலைப் பல்கலைக்கழகம்
மூன்றாம் பட்டமளிப்பு விழா

1,846 மாணவர்களுக்கு
பட்டங்களை வழங்கி விழாப் பேருரை

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் வேந்தர்

வாழ்நாள் சாதனையாளருக்கான
மதிப்புறு முனைவர் பட்டங்கள் பெறுவோர்
ஓவியர் திரு. குருசாமி சந்திரசேகரன் அவர்கள்
திரைப்பட நடிகர் திரு. சிவகுமார் அவர்கள்

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,
துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்
மற்றும் சீர்மிகு பெருமக்கள் பங்கேற்கிறார்கள்.

நாள் : 28.11.2025 வெள்ளிக்கிழமை, நேரம்: காலை 10.00 மணியளவில்
இடம்: கலைவாணர் அரங்கம், சென்னை.

செ.ம.தொ.இ./1411/வரைகலை/2025

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 600 009.